# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate

+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



67

நகர் ஊரமைப்புத்துறை

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ), மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், ஈரோடு மாவட்டம் அவர்களின் செயல்முறை ஆணை,

பிறப்பிப்பவர் : திரு. ந. ரா. தியாகராஜன் பி.டெக்.

---

ந.க.எண்.1006/2021/ஈமா 2 நாள்: .9.2021

பொருள் : மனைப்பிரிவு-நகர் ஊரமைப்புத்துறை – மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் – ஈரோடு மாவட்டம் – சத்தியமங்கலம் வட்டம் – சத்தியமங்கலம் நகராட்சி – வார்டு-D, Block-6, T.S.No.16/4-(S.F.No.347pt)-ல் 2.44 3/4 ஏக்கர் அல்லது 9909.00 ச.மீ பரப்பளவுள்ள இடத்தில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில் நுட்ப ஒப்புதல் வழங்குதல் – குறித்து.

பார்வை :

1. மனுதாரர் திருமதி.A.சுசீலா என்பவரது விண்ணப்பம் நாள். இல்லை (பெறப்பட்ட நாள்.3.3.2021) இணையதளம் விண்ணப்பம் எண். 20210040101 0247 நாள்.12.01.2021
2. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ) மாவட்ட நகர் ஊரமைப்பு அலுலகம், ஈரோடு மாவட்டம், அவர்களின் கடிதம் ந.க.எண். 1006/2021/ஈமா 2 நாள்.29.03.2021
3. மனுதாரர் திருமதி.A.சுசீலா என்பவர்களது கடிதம் நாள்.12.8.2021 (சாலை பகுதிகள், மற்றும் பொது உபயோகம் உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டமைக்கான தானப் பத்திரம் ஆவணம் எண்.4188/2021 நாள்.4.8.2021 மற்றும் மின் பகிர்மானத்திற்கான இடம் TANGEDCO-பரப்பு உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யபட்டமைக்கான தானப்பத்திரம் ஆவணம் எண்.4189/2021 நாள்.4.8.2021)
4. அரசாணை எண்.18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி-(I)துறை நாள்.04.02.2019 மற்றும் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி-(I) துறை, நாள்.31.01.2020.
5. அரசாணை எண்.181 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி நவ4(3)த்துறை, நாள்.09.12.2020
6. அரசாணை எண்.138 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி நவ4(3)த்துறை, நாள்.04.06.2004
7. அரசாணை எண்.141 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி நவ4(3)த்துறை, நாள்.23.09.2020
8. அரசு கடிதம் எண்.19113/ந.வ4(3)/2017-1 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்.30.08.2017

9. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.13686/2017/LA1 நாள்.08.09.2017
10. இவ்வலுவலக கேட்பு கடிதம் இதே எண் நாள்.01.09.2021
11. மனுதாரர் கட்டணங்கள் செலுத்திய விபரம் பெறப்பட்ட நாள் 20.09.2021

************

உத்தரவு:

1. பார்வை 1-ல் சுட்டிய மனுதாரர் கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு அனுமதிக்கான கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு பார்வை 2-ல் சுட்டிய இவ்வலுவலக கடிதம் மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் ஒப்புதல் வழங்கப்பட்டது. பார்வை 3-ல் சுட்டிய மனுதாரர் கடிதம் மூலம் சாலை பகுதிகள், மற்றும் பொது உபயோகம் உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டமைக்கான தானப் பத்திரம் ஆவணம் எண். 4188/2021 நாள்.4.8.2021 மற்றும் மின்பகிர்மானத்திற்கான இடம் TANGEDCO-பரப்பு உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டமைக்கான தானப் பத்திரம் ஆவணம் எண். 4189/2021 நாள்.4.08.2021 மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

2. மனைப்பிரிவிற்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ./ஈமா எண்.282/2021 என எண்ணிடப்பட்டு 3 அசல் வரைபடங்கள் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

3. மேலும் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது மனைப்பிரிவு நிபந்தனை எண்.10 (ஆ)-ன்படி அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

4. உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப்பதிவு அலுவலகத்திற்கும், நில அளவைத் துறைக்கும் தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

5. செயலாணை கடிதம், மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகைச்சான்றினை உடன் அனுப்பி வைக்குமாறும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

## சிறப்பு நிபந்தனைகள்

1. (a) பார்வை 5-ல் கண்ட அரசாணை மற்றும் பார்வை 4-ல் கண்ட Tamil Nadu Combined Development Building Rules 2019 விதி எண்.47 (11)-ன்படியும் மாநகராட்சி / நகராட்சி பகுதி எனில் "Collecting the necessary fees including the charges for providing amenities like roads, storm water drains and street lights from the applicants" After Collecting the necessary fees the final layout sketch, permit of Planning authority along with approval of Local Body shall be issued to the applicant(s) directly.

   (b) மாநகராட்சி / நகராட்சி அல்லாத பகுதி எனில் " Shall collect the necessary fees and issue the final layout sketch, permit of Planning authority along with the permit of local body to the applicant lays tar roads, provide other amenities like storm water drains, water supply facilities by constructing required OHT, provide necessary street lights etc., as per the standards specified by the Local Body".

2. (EWS) பொருளாதாரத்தால் பின் தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது. ஆனால் கிராமப்புற பகுதிகளில் மனை ஒப்புதல் வழங்கப்பட்ட 3 வருடங்களுக்கு மேலாகியும் EWS மனைகள் விற்க இயலாத நிலை இருப்பின் அரசாணை எண். 16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள்.31.1.2020-ன்படி EWS மனைகளை ஒருங்கிணைப்பு செய்ய விண்ணப்பித்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.

3. பார்வை 8 மற்றும் 9-ல் கண்ட அரசு கடிதம் மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சியின் பெயரில் உரிமை மாற்றம் செய்து வருவாய் ஆவணங்களில் சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

4. The Tamil Nadu Government in G.O. Ms. No: 112, Housing and Urban Development Department, Dated: 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development Act 2016). The promoter has to advertise, Market, Book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Rugulatory Authority"–ன்படி நடவடிக்கை தொடருமாறு மனுதாரரை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இணைப்பு:

1. அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம்
   ம.வ./ஈமா எண்.282/2021 மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள் –3 தொகுப்பு
2. தானப்பத்திரம் எண். 4188/2021 மற்றும்
   4189/2021–ஆகியவற்றின் அசல் ஆவணம்.

24/09/24

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
ஈரோடு மாவட்டம்.

24/9/24 24/9/24

பெறுநர்

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி,
சத்தியமங்கலம் வட்டம்,
ஈரோடு மாவட்டம்.

// உண்மைநகல் //

நகல்: மனுதாரர் (உள்ளாட்சி வழியாக)

திருமதி.A.சுசீலா
W/o.M.அன்பழகன்
4/778, கவிதா நகர்,
பாரியூர் வெள்ளாளபாளையம்,
குள்ளம்பாளையம் கிராமம்,
கோபிசெட்டிபாளையம் வட்டம்,
ஈரோடு மாவட்டம் –638 476.

ஆணையாளர் (பொ)
சத்தியமங்கலம் நகராட்சி.

24/10/24

நகல் (தகவலுக்காக)

The Chairman,
Tamil Nadu Real Estate Regulatory Authority,
No.1A, CMDA Tower II, 1st Floor,
Gandhi Irwin Bridge Road,
Egmore, Chennai – 600 008.

# தமிழ்நாடு அரசு
# நகர் ஊரமைப்புத் துறை
# மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
# ஈரோடு மாவட்டம்.

ஈரோடு மாவட்டம்,
சத்தியமங்கலம் வட்டம்,
சத்தியமங்கலம் நகராட்சி,
சத்தியமங்கலம் கிராமம்.

கோப்பு எண்.1006/2021/ஈமா-2 மனைப்பிரிவு ம.வ./ஈமா எண்.282/2021

## மனைப்பிரிவு நிபந்தனைகள்

1. தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள், 2019-இல் மனைப்பிரிவிற்காக விதிக்கப்பட்டுள்ள அனைத்து விதிகளும் இம்மனைப்பிரிவிற்குப் பொருந்தும். எனவே, பொருத்தமான விதிகள் அனைத்தும் பின்பற்றப்பட வேண்டும்.

2. ஈரோடு மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்புத்துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.

3. இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (SPLAY) அமைக்கப்பட வேண்டும்.

4. மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளை நிறைவேற்றுதற்கு முன்பு எந்த ஒரு மனையையும் விற்கவோ, குத்தகைக்கு விடவோ வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த ஒரு மனையிலும் கட்டிடம் கட்டவோ கூடாது.

5. அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். மேலும் மனை உபயோகம் மாற்றம் கோரும் இடங்களில் மட்டுமே Tamil Nadu Combined Development Building Rule 2019-ல் குறிப்பிட்டுள்ள Residential Use-ல் குறிப்பிடப்பட்டுள்ளவைகளுக்கு மட்டுமே நகர் ஊரமைப்பு துறையின் முன் அனுமதி பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் அனுமதிக்கப்பட வேண்டும்.

6. மனைப்பிரிவின் ஊடே குறைந்த அழுத்த, உயர் அழுத்த மின் கம்பிப் பாதை, தந்திக் கம்பிப்பாதை அமைந்தால், கம்பிப்பாதையை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் காண்பித்துள்ளவாறோ மாற்றி அமைக்க வேண்டும்.

7. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.

72

8. 7.2 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லா தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்து 9.00 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1.00 மீட்டருக்குள் வளர்க்கப்பட வேண்டும்.

9. மனுதாரர் மனைப்பிரிவிற்கு தொடர்புடைய ஆணையாளர், சத்தியமங்கலம் நகராட்சி அவர்களிடமிருந்து ஒப்புதல் பெற்றுக் கொள்ள வேண்டும். மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கு நகர் ஊரமைப்புத்துறை மற்றும் உள்ளாட்சியிடமிருந்து அனுமதி பெற வேண்டும்.

10. (அ)மேற்படி மனைப்பிரிவிற்கு ஈரோடு மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தால் தொழில்நுட்ப அனுமதி மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. என்பதால் மனைப்பிரிவிற்கான இட உரிமை தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் உள்ளாட்சியினரால் பரிசீலித்து முடிவு எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)மேற்படி மனைப்பிரிவுக்கு உள்ளாட்சியால் அங்கீகாரம் அளிக்கப்படும் போது அங்கீகார நிர்வாக அதிகாரியின் முன்னிலை நடவடிக்கையின் நகலினை இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்ப வேண்டும். இதில் பொது திறவிடங்கள் உள்ளாட்சியிடம் ஒப்படைத்ததற்கான சான்றும் இணைக்கப்பட வேண்டும்.

11. மனுதாரர், ஆணையாளர், சத்தியமங்கலம் நகராட்சி அவர்களிடமிருந்து மனைப்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன் மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6' x 4' அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்காகவும் மேலும் மனைப்பிரிவு அங்கீகரித்த மன்றத் தீர்மான எண்ணும் நாளும் தெளிவாக குறிப்பிட்டு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

12. மனுதாரர் சமர்ப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின்படி நில உரிமை குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே, உண்மையில் நில உரிமம் இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்காக எந்த உரிமையும் கொண்டாட முடியாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

13. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவுப்புமின்றி நகர் ஊரமைப்புத்துறையால் ரத்து செய்யப்படும்.

14. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு, நகர் ஊரமைப்புத்துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

15. தள பரப்பு குறியீடு எண் (FSI) TNCDBR 2019–ன்படி அனுமதிக்கலாம்.

16. கோவில், தேவாலயம், மசூதி ஆகியவற்றிற்காக ஒதுக்கப்பட்டிருந்தால், அம்மனைகளை வரைபடத்தில் காட்டியுள்ளது போல் உட்பிரிவு செய்து கொள்ள வேண்டும். மனைகளை அதற்குரிய உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

17. தமிழ்நாடு நகர்புற நில உச்சவரம்பு சட்டம் 1978 நடைமுறையில் உள்ள இடத்தில் அமைந்தால் மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கப்பட்ட விபரத்தினை தொடர்புடைய உச்சவரம்புச் சட்ட அதிகாரிகளுக்கு தெரிவித்தல் வேண்டும்.

18. 1894-ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் சட்டப்பிரிவு 4 மற்றும் நில உச்சவரம்பு சட்டம் 1978 மற்றும் நிலச் சீர்திருத்தச் சட்டம் 1961 தொடர்பாக மனுதாரர் அளித்த உறுதிமொழியின் பேரில் மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. எனவே, இம்மனைப்பிரிவிற்கான நிலம் மேற்படி சட்டங்களின் நடவடிக்கைகளுக்கு உட்படின், அதற்கு மனுதாரரே பொறுப்பாவார்.

19. மேலும், மேற்படி சட்டங்களின்படி நில ஆர்ஜிதம் சம்பந்தமாக நில ஆர்ஜிதப்பட்டியல் (Land Plan Schedule) எதுவும் பரிசீலனைக்குப் பெறப்படவில்லை என்பதை உறுதி செய்து மன நிறைவு அடைந்த பின்னரே, மனைப்பிரிவிற்கு ஆணையாளர், சத்தியமங்கலம் நகராட்சியால் ஒப்புதல் அளித்து அங்கீகாரம் வழங்கும்படி தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

20. உள்ளாட்சி அதிகாரியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் ஒன்றும் நிபந்தனை படிவம் ஒன்றும் சம்பந்தப்பட்ட பதிவுத் துறை அலுவலருக்கு மேல் நடவடிக்கைக்காக அனுப்பி வைக்குமாறு உள்ளாட்சி அதிகாரியை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

<u>அங்கீகரிக்கப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு ம.வ./ஈமா எண். 282/2021-ன் ஒதுக்கீடு விபரம்</u>

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், சத்தியமங்கலம் நகராட்சி, வார்டு-D, Block-6, T.S.No.16/4-(S.F.No.347pt)-ல் 2.44 3/4 ஏக்கர் அல்லது 9909.00 ச.மீ

| | | பரப்பளவு | விழுக்காடு |
|---|---|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | : | 2.44 3/4 ஏக்கர் அல்லது 9909.00 ச.மீ | |
| ஒதுக்கிய மனைகள் | : | 46 மனைகள் | |
| **பொது ஒதுக்கீடு:** | | | |
| மனுதாரரால் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை | | | |
| மனைப்பிரிவு சாலைகள் பரப்பு | : | 3590.58 ச.மீ | |
| உள்ளாட்சிக்கான பொது உபயோகம் பரப்பு | : | 41.87 ச.மீ | 0.66 % |
| தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின்பகிர்மான கழகத்திற்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை | | | |
| மின்பகிர்மானப் பரப்பு (TANGEDCO) | : | 43.36 ச.மீ | 0.69 % |
| 10% பூங்கா 640.00 ச.மீ பரப்பிற்கு ஈடாக அரசு வழிகாட்டு மதிப்பீட்டு தொகை ரூ.23,10,500/- உரிய அரசு கணக்கு தலைப்பில் மனுதாரரால் 16.09.2021 அன்று மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது. | | | |

24/09/21

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
ஈரோடு மாவட்டம்.

24/9/21 24/9/21

// உண்மைநகல் //

ஆணையாளர் (பொ)
சத்தியமங்கலம் நகராட்சி.

28/10/24

சத்தியமங்கலம் நகராட்சி ஆணையாளர்(பொ) அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை: திரு. எம்.சிவக்குமார்
நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர் (பொ)



ந.க.எண். 46/2021/எப்1 நாள்: 29.10.2021

பொருள்: மனைப்பிரிவு- சத்தியமங்கலம் நகராட்சி- சத்தியமங்கலம் கிராமம்- வார்டு-டி, பிளாக்-6, நகரளவு எண்-16/4, க.ச.எண்-347(pt) இல் 2.44 ¾ ஏக்கர் பரப்பளவில் மனைப்பிரிவு அமைக்க நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ),ஈரோடு அவர்களின் கடிதம் ந.க.எண்.1006/2021/ஈமா2 நாள் 24.9.2021-இல் வழங்கப்பட்ட ஆணைப்படி அங்கீகாரம் செய்து இறுதி ஒப்புதல் மற்றும் உத்திரவு வழங்குதல் தொடர்பாக.

பார்வை:1) திருமதி.A.சுசீலா க/பெ அன்பழகன் அவர்களின் விண்ணப்பம் நாள் 13.01.2021( தங்களால் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ), ஈரோடு அவர்களுக்கு விண்ணப்பம் செய்யப்பட்ட நாள்.3.3.2021

2) நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ), ஈரோடு அவர்களின் கடிதம் ந.க.எண்.1006/2021/ஈமா2 நாள் 29.03.2021-இன் படி நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்ய அங்கீகரிக்கப்பட்ட சாலை மற்றும் பொது உபயோக அமைப்பு வரைபடம் .

3) நகர்மன்றத் தீர்மானம் எண்.711/ நாள் 22.10.2021

4) சார் பதிவாளர் அலுவலகம், சத்தியமங்கலம் அவர்களின் அலுவலக தான ஆவண எண்.4188/2021 நாள் 4.10.2021.

5) நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ), ஈரோடு அவர்களின் கடிதம் ந.க.எண். 1006/2021/ஈமா2 நாள் 24.09.2021-இன்படி தொழில்நுட்ப அனுமதி உத்திரவு ஒப்புதல் மற்றும் மனைப்பிரிவு ம.வ/ஈமா.எண்.282/2021 என எண்ணிட்ட அங்கீகாரம் செய்யப்பட்ட வரைபடம் .

-----

**உத்திரவு:**

பார்வை 1-ல் கண்டுள்ள தங்களின் விண்ணப்பத்தில் சத்தியமங்கலம் நகராட்சி, சத்தியமங்கலம் கிராமம் சர்வே வார்டு-டி, பிளாக்-6, நகரளவு எண்-16/4 ,க.ச.எண்-347(pt) இல் 2.44 ¾ ஏக்கர் பரப்பளவிற்கு குடியிருப்பு மனைப்பிரிவு அனுமதி கோரி நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகத்திற்கு 3.3.2021 அன்று விண்ணப்பம் செய்யப்பட்டு, அதனை பரிசீலனை செய்து பார்வை 2-ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ), ஈரோடு அவர்களின் கடிதத்தில் கண்டுள்ள அங்கீகாரம் செய்யப்பட்ட சாலை அமைப்பு வரைபடத்தின்படி பார்வை 3-ல் கண்டுள்ள நகர்மன்றத் தீர்மானத்தின்படி ஒப்புதல் பெறப்பட்டு

சாலை மற்றும் பொது உபயோக ஒதுக்கீடுகளை பார்வை 4-ல் கண்டுள்ள தான ஆவண எண். 4188/2021/நாள் 4.10.2021-இன்படி தானமாக பெறப்பட்டுள்ளது.

**இறுதி ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடுகள் விபரம் பரப்பளவு**

| | |
|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | : 2.44 ¾ ஏக்கர் |
| கோரிய மனைகள் | : 51 Nos |
| ஒதுக்கிய மனைகள் | : 46 Nos |

<u>பொது ஒதுக்கீடு</u>

| | |
|---|---|
| 1.பொது உபயோக இடம் | : 41.87 சமீ |
| 2. உத்தேச சாலைகள் மற்றும் மூலை முடக்குகள் | : 3590.58 சமீ |
| 3. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கானது. | : 43.36 சமீ |

நிபந்தனைகள்

1. நகர் ஊரமைப்பு துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ), ஈரோடு அவர்கள் தெரிவித்துள்ள நிபந்தனைகளை மீறக்கூடாது.

2. ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு இடத்தில் மாற்றங்கள் செய்யப்பட இருப்பின் நகர் ஊரமைப்பு துறையின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.

மேற்கண்ட மனைப்பிரிவிற்கு மனைப்பிரிவு நிபந்தனைகள் வரிசை எண் 15 முதல் 18 ஆகியவற்றினை நிறைவு செய்யும் வகையில் வட்டாட்சியர், சத்தியமங்கலம் அவர்களின் கடிதம் ந.க.எண்.மூ.மு.6674/2021/அ4-ன்படி நாள் 27.10.2021-ல் தடையின்மை சான்று பெறப்பட்டுள்ளது. பார்வை 5-ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ), ஈரோடு அவர்களின் கடிதம் ந.க.எண். 1006/2021/ஈமா2 நாள் 24.09.2021-இன்படி மேற்கண்ட மனைப்பிரிவினை அங்கீகாரம் செய்து மனைப்பிரிவு எண். ம.வ/ஈமா. எண்.282/2021 என எண்ணிட்டு தொழில்நுட்ப அனுமதியுடன் வரைபடம் பொது

நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுடன் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆணையில் குறிப்பிட்டுள்ளவாறு பார்வை 3-ல் கண்டுள்ள இந்நகர் மன்ற தீர்மானம் எண். 711/2021 நாள் 22.10.2021 இன்படி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட நகர்மன்ற தீர்மானத்தின்படியும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ), ஈரோடு அவர்களின் ஆணையில் கண்டுள்ள பொது மற்றும் சிறப்பு நிபந்தனைகளின்படியும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கி உத்திரவிடப்படுகிறது.

29/10
ஆணையாளர்(பொ),
சத்தியமங்கலம் நகராட்சி.
29/10/24

இணைப்பு:
நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ), ஈரோடு அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட வரைபடம் மற்றும் பொது நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகள்.

பெறுநர்
திருமதி.A.சுசீலா,
க/பெ அன்பழகன்,
4/778,கவிதா நகர்,
பாரியூர் வெள்ளாள பாளையம்,
குள்ளம்பாளையம் கிராமம், கோபிசெட்டிபாளையம் வட்டம்,
ஈரோடு மாவட்டம்-638476

நகல்:

1. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ), ஈரோடு அவர்களின் நிபந்தனை எண்.10 இன்படி அனுப்பப்படுகிறது.
2. சார்பதிவாளர், சத்தியமங்கலம்.
3. நகராட்சி பொறியாளர் (சொத்து பதிவேட்டில் தான ஆவண மூலம் பெறப்பட்ட சாலையினை பதிவு செய்யவும், மின்விளக்கு வசதி பராமரிக்க நடவடிக்கைக்காக.
4. துப்புரவு அலுவலர், சத்தியமங்கலம் நகராட்சி மேஜைக்கு
5. வருவாய் ஆய்வாளர்,(வரிவிதிப்பு செய்து மேல்நடவடிக்கைக்காக)
6. நகரளவர் (தான ஆவணங்கள் மூலம் பெறப்பட்ட சாலை மற்றும் பூங்கா ஒதுக்கீட்டினை நகராட்சி ஆணையர் பெயருக்கு வருவாய் துறை மூலம் உட்பிரிவு செய்ய நடவடிக்கைக்காக.



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate